பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாத காரணத்தால் டி.டி.சி.யில். விரிவாக இது விவாதிக்கப்பட்டு, துறை அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து நிரந்தரமான ஒரு தீர்வு காண தனியாக Pipe line with wider diameter அமைப்பதன் மூலமே இந்தக் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க முடியும் என்று துறை முடிவு செய்து, அதன் செயல் திட்டத்தை 1991ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அரசுக்கு அனுப்பியதாக அறிகிறேன். அந்தத் திட்டத்தை மீண்டும் அரசு பரிசீலனை செய்து, செயல்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி பேரூராட்சியில் உள்ள கீழ்மட்ட நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து அக்கம்மா பேட்டைக்குச் செல்லும் வழியில் வீட்டு குடிநீர் இணைப்புகள் அதிகமாக உள்ளன. எனவே இப்பகுதிக்கு பிரத்தியேகமாகக் குழாய்கள் அமைத்தால் குடிநீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியும். இதற்கு சுமார் 5 இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்று கருதப்படுகிறது. எனவே இந்த 5 இலட்சம் ரூபாயை குடிநீர் வடிகால் வாரியத்தில் செலுத்தினால் உடனடியாக அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் 234, திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை. டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

234—

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

*11957—<u>திரு. ஆர். சிங்காரம் :</u> மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் எத்தனை ?

(ஆ) அத்திட்டங்கள் முழு அளவில் மக்களுக்கு பயன் பெற பெரியார் நீர்த்தேக்கத்தில் இருந்து தண்ணீர் கொண்டு வர அரசு 1992-93 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யுமா

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1993 ஏப்ரல் 2]

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கூட்டுக் குடிநீர் திட்டங்களின் விவரம் பின்வருமாறு :—

(1) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் 28 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்.

(2) ஒன்றியங்களின் பராமரிப்பில் 12 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்.

(3) பணி முன்னேற்றத்தில் 2 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள். புதியதாக உள்ள 2 கூட்டுக், குடிநீர்த் திட்டங்கள்.

(ஆ) இக்கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்காக பெரியார் நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம் எதுவும் வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-40

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 28 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும், உள்ளாட்சி நிர்வாகத்தின்கீழ் 12 திட்டங்களும், புதிதாக இரண்டு திட்டங்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் திட்டமிட்டுச் செயல்படுத்த எண்ணிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நீர் ஆதாரம் இல்லாத காரணங்களால் பயன் இல்லாமல் இருக்கின்றன. ஆகவே மதுரை மாவட்டத்திற்கு வைகை அணையிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டம் போல இராமநாதபுரம் மாவட்ட மக்களின் நலன் கருதி நீர்த்தேக்கங்களில் இருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டத்தை செயல்படுத்த அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள குடிநீர் ஆதாரங்களை மையமாகக் கொண்டு விரைவில் புதியதொரு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்கள் ஆய்வுப் பணியில் இருக்கின்றன என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமும் ஊராட்சி ஒன்றியத்தின் மூலமும் பராமரிப்பில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் ஏறக்குறைய 4,5 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் தவிர அத்தனைத் திட்டங்களும் பயன்பெறாத நிலையில் கிடப்பில் இருக்கின்றன. இந்த நிலையைப் போக்க இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பொதுமக்களுக்கு தாகத்திற்கு தண்ணீர் கொடுக்கிற வகையில் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்

தலைவி அவர்கள் கடந்த நிதிநிலை அறிக்கையில் ஒரு புதிய கொள்கையை அறிவித்தார்கள். மழைக் காலங்களில் கடலில் சென்று வீணாகக் கலக்கின்ற மழை நீரைத் தேக்கி குடிநீராகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை பரீட்சார்த்தமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் கடலில் சென்று கலக்கும் நீரைத் தேக்கி குடிநீரைக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்து பொதுப்பணித் துறை பல்வேறு நிலைகளில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 235, திரு கே. ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை.

வினா எண். 236, திரு. டி. சுதர்சனம் இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திரு. அ. தேவராஜ், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

236—

தமிழக கரும்பு விவசாயிகளுக்கு மற்ற மாநிலங்களில் வழங்கும் கொள்முதல் விலையை வழங்கல்.

*10653—திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மற்ற மாநிலங்களில் கரும்புக்கு அளிக்கப்படும் கொள்முதல் விலையைப் போல் தமிழக கரும்பு விவசாயிகளுக்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இயலாது.

திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இயலாது என்று தெரிவித்திருக்கிறார். பொதுவாக கரும்பு விவசாயம் செய்யும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு வருடத்திற்கு ஒரு முறை தான் பணத்தைப் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அதை வரும் ஆண்டிலாவது ஏற்றிக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.